#

“இதுவும் கடந்து போகும்” என்ற

# அகமாற்றம் தேவை - 13

இந்தக் கட்டுரையைப் படிக்கத் தொடங்கும் ஒவ்வொருவருக்கும் இந்தப் பாடல் தெரிந்திருக்கும் என நினைக்கிறேன். முன்பு எப்போதோ கேட்ட ஞாபகம் வருகிறதா என்று பாருங்கள்.

*“நான் கேட்டுத் தாய் தந்தை படைத்தாரா? இல்லை*

*எனைக் கேட்டு என் பிள்ளை பிறந்தானா?”*

நன்றாக யோசித்துப் பார்த்தால் இந்தப் பாடல் வரிகளில் எவ்வளவு பெரிய உண்மை ஒளிந்திருக்கிறது என்பது தெரிய வரும்.

“என் அப்பா அம்மா சரியில்லை!”

“என் தலை எழுத்து எனக்கு இப்படி ஒரு புருஷன்”

“தேடித்தேடி நான் பேயைப் பெண்டாட்டியாக் கட்டி இருக்கேன்”

“இப்படி ஒரு தறுதலையா எனக்குப் பிள்ளையா பிறக்கணும்?”

“இந்த வீட்டில் பிறக்காமல் வேறுஎந்த வீட்டிலாவது நான் பிறந்திருக்கக்கூடாதா?”

“நான் இந்தியாவில் ஏன் பிறக்கவில்லை? இந்த நாட்டில் பிறந்து இப்படி அவதிப்படுகிறேனே!”

இப்படி எத்தனையோ உரையாடல்களை எத்தனை எத்தனையோ விதங்களில் நாம் கேட்டிருக்கிறோம். நாமே கூட பலவாறாகச் சொல்லி இருக்கிறோம். அல்லது நினைத்தாவது பார்த்திருக்கிறோம். ஆனால் மிக ஆழமான உண்மை என்னவென்றால் நாம் கேட்டுத்தான் இந்தப் பெற்றோரும் சுற்றமும் ஊரும் சூழலும் கல்வியும் தொழிலும் செல்வச்செழிப்பும் மக்கட்செல்வமும் நமக்குக் கிடைத்திருக்கின்றன என்பதுதான்.

போன பிறவியில் நாம் எதற்கெல்லாம் ஆசைப்பட்டோமோ, எப்படி எல்லாம் நடந்துகொண்டோமோ அதற்கு ஏற்பத்தான் அந்த ஆசைகளே எண்ணங்களாகி அந்த எண்ணங்களே கர்மப்பதிவுகளாக நமது ஜீவனில் பதிந்து இந்தப் பிறவியை நமக்குத் தந்திருக்கின்றன. என்ன! நான் சொல்வதை ஒப்புக்கொள்ள உங்கள் மனம் மறுக்கிறதா? இதோ இந்த உதாரணத்தின் மூலம் இது புரிகிறதா? என்று பாருங்கள்.

ஒரு கம்யூட்டர் விஞ்ஞானி ஒரு ரோபோவை உருவாக்குகிறார். இந்த ரோபோ என்னென்ன வேலைகளை எல்லாம் செய்யும் என்று அதற்கென ஒரு திட்டம் தயார் செய்து அதை மிகச் சிறிய “சிப்” வடிவில் அதன் உள்ளே பதித்துத் தேவையான உபகரணங்களை இணைத்துப் பொருத்திக் குறிப்பிட்ட வருடங்கள்வரை செயல்படும் என்ற உத்திரவாதத்துடன் அதை இயக்கிக் காட்டுகிறார். வியக்கத்தக்க பல செயல்களை அது செய்கிறது. அச் செயல்களுக்கு மூல காரணம் அதன் உட்பகுதியில் பொருத்தப்பட்ட அந்த “சிப்”.

இதே விதத்தில் தான் இறைவன் என்று நாம் சொல்கின்ற பிரம்மன், போன பிறவியில் நாம் செயல்பட்ட தன்மைக்கேற்ப அதன் எதிர் விளைவுகளாக நிறைவேறாத ஆசைகளையும் சேர்த்துக் கர்மப்பதிவுகளை ஆதாரமான “சிப்” பாக வைத்து இந்த நமது பிறவியை வடிவமைத்து அனுப்பியிருக்கிறார்.

அதன்படி நமது கர்மாவிற்கு ஏற்ப நமது பெற்றோரும் மற்ற எல்லாமும் நமக்கு அமைந்திருக்கின்றன. நமக்குக் கை முதலாகத் தரப்பட்ட இந்த ஆதாரங்களை வைத்துத்தான் நாம் வெற்றிகரமாக நமது வாழ்க்கையைக் கொண்டு செல்ல வேண்டும்.

#

என் குருநாதர் அடிக்கடி சொல்லுவார். “சீட்டாட்டத்தில் ஜெயிக்கக் கூடிய கார்டுகளை வைத்து விளையாடி ஜெயிப்பதில் என்ன திரில் இருக்கிறது? மிக மோசமான ‘கார்ட்ஸ்’ வந்தாலும் அவற்றை வைத்துக்கொண்டே அற்புதமாக விளையாடி ஜெயிப்பவன் தான் கில்லாடி” என்று.

ஆனால், நாம் என்ன செய்கிறோம்? ஐயோ! எனக்கு அது சரியில்லை. இது சரியில்லை. அவன் சரியில்லை. இவன் சரியில்லை என்று ஒப்பாரி வைத்து அழுது கொண்டிருக்கிறோமே தவிர நான் சரியாய் இருக்கிறேனா? என்று என்னை நான் ஆராய்ச்சி செய்வதில்லை. எல்லோரும் நம்மை அனுசரித்துப் போக வேண்டும் என்று தான் விரும்புகிறோமே தவிர நாம் பிறருக்கு எவ்வளவு இடைஞ்சல்களைச் செய்து கொண்டிருக்கிறோம என்று ஒரு நொடியாவது யோசித்திருக்கிறோமா? அப்படி யோசிக்க நமக்கெல்லாம் ஏது நேரம்? அறியாமையும் அவசரமும் படபடப்பும் ஆசைகளும் தானே நம்மை ஆட்டிப் படைத்துக் கொண்டிருக்கின்றன.

வெளியிலேயே மனதையும் புலன்களையும் பறக்க விட்டுக் கொண்டிருப்பதைக் கொஞ்சம் நிறுத்தி அமைதியாக ஆற அமர நிதானமாக ஒவ்வொரு செயலையும் யோசித்து மனதிறகுச் சரியென்று பட்டதை மட்டும் செய்து கொண்டு போக முற்பட்டாலே பாதிப்பிரச்னை இல்லாமற் போகும். நமது கர்மாவால் நமது வாழ்க்கை பல்வேறு பிரச்சனைகளால் அலைக்கழிக்கப்படுகின்ற நிலையில் இப்போது போய்க்கொண்டிருக்கலாம். எதுவுமே சரியில்லாமல் தலையைப் பிய்த்துக்கொள்கின்ற நிலையில் போவதாக அமைந்திருக்கலாம். ஆனால் நான் அவற்றை நிதானப்படுத்தப்பட்ட மனதுடன் எதிர்கொண்டால் ஓரளவிற்குச் சமாளிக்கலாம்.

அட! இந்த மனம் தானே சரியான பாதிப்பை அடைந்து என்னைத் துளைத்தெடுக்கிறது. நிம்மதி இழந்து தவிக்கிறது. இந்த நிலையில் எப்படி அமைதிப்பட்ட மனதுடன் எல்லாவற்றையும் எதிர்கொள்ள முடியும்? என்று பதட்டமாக நீங்கள் கேட்பது புரிகிறது.

“பதறாத காரியம் சிதறாது” என்பது நீங்கள் அறிந்த ஒன்றுதானே! ஒன்று நம்மை மீற் நடந்து விட்டால் ஏன் பதற வேண்டும்? ஏன் அப்படியே துடிக்க வேண்டும்? அமைதியாய் எதிர்கொள்ள நம்மால் முடியவே முடியாதா? எனக்கு எது நடக்கிறதோ அது எல்லாமே எனது கர்மாவால் தான் நடக்கிறது என்ற உண்மையை நாம் முதலில் மிக நன்றாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

எந்த ஒரு செயலுக்குமே ஒரு எதிர்ச் செயல் உண்டு. Every action has a reaction என்று விஞ்ஞானம் நிரூபித்திருக்கிறது.

நாம் கவனமாகப் படிக்காவிட்டால், தேர்வில் தோல்விதான் நான் மிக அக்கறையுடன் உழைக்காமல் சோம்பினால் வேலையில் கிடைப்பது தோல்விதான். அன்பு செலுத்திக் குடும்பம் நடத்தாமல் அதிகாரத்தில் கொண்டு போனால் அங்கு சம்சாரத்தில் தோல்வியே. விட்டுக் கொடுக்காத தன்மை சச்சரவில்தான் சென்று முடியும்.

அகங்காரமும் சுயநலமும் கெட்ட சிந்தனையும் குடும்பப் பிளவில் தான் முடியும். போட்டியும் பொறாமையும் பொய்யும் பேராசையும் சந்தேகமும் பயமும் கீழ் நிலைக்குத்தான் கொண்டு தள்ளும்.

இதையெல்லாம் நாம் எப்போதாவது யோசித்துப் பார்த்திருக்கிறோமா? காலையில் கண் விழித்ததிலிருந்து மீண்டும் இரவு படுக்கைக்குப் போகும் வரையில் முறையாக சரியாக நாம் செயல் படுகிறோமா? மாறாக மிருகங்களைப் போலத் தோன்றியபடி எல்லாம் மனதிற்கும் புலன்களுக்கும்

#

எந்தவிதச் சம்பந்தமுமின்றி இஷ்டத்திற்குச் செய்து கொண்டு போகிறோம். புத்தி சரியானதைச் செய்யும்படி சொல்லிக் கொண்டே இருக்கும். மனமோ உணர்ச்சி வசப்பட்டுக் கொந்தளிக்கும். அப்படி அந்த நிலையில் மனம் சொல்வதை ஏற்றுப் புலன்கள் செயல்படும்.

வயிறு வேண்டாம், வேண்டாம் என்று கூப்பாடு போட்டாலும் மனதில் எழும் ஆசை காரணமாகக் கை, வாய் வழியாக விருப்பமான உணவு என்று உள்ளே தள்ளிக் கொண்டே தானே இருக்கிறது?

கண் தூக்கத்தில் சொக்கினாலும் பாதி இரவு வரை தொலைக்காட்சித் தொடர்களை விடாமல் பார்ப்பவர்கள் நம்மில் எத்தனை பேர்? புத்தி சொல்வதை மனம் கேட்டு அதன்படி புலன்கள் இயங்கினால் கர்மாவை வெல்லலாம் என்பது எத்தனை பேருக்குப் புரிகிறது?

“தர்மோ ரக்ஷதி ரக்ஷது” என்று பகவத்கீதையில் கண்ணன் சொல்லியிருப்பதாக என் குருநாதர் அடிக்கடி சொல்லிக்கொண்டே இருப்பார். “தர்மத்தை நீ காப்பாற்றினால் அந்த தர்மம் உன்னைக் காப்பாற்றும்” என்பது இதன் பொருள். அப்படியென்றால் என்ன?

எது சரியோ அதைச் சரியான முறையில் நீ செய்து கொண்டே போனால் அப்படி நீ செய்கின்ற செயலே உன்னைக் காப்பாற்றும், உயர்த்தும். இதையே வேறுவிதமாகப் பார்த்தால் நீ எதைச் செய்கிறாயோ, அதைப் பெறுவாய்! அப்படியென்றால் நீ நல்லதைச் செய்தால் நல்லதைப் பெறுவாய், தீயவற்றை அல்லது பிழையானவற்றைச் செய்துகொண்டு போனால் தீமையும் தோல்வியும் தான் திரும்பக் கிடைக்கும். மனக்கஷ்டமும் பண நஷ்டமும் குற்ற உணர்ச்சியும் தான் மிஞ்சும்.

நான் நல்லதையேதான் செய்பவனாக இருக்கிறேன். சரியானதைத் தவிர வேறு எதையுமே செய்வதில்லை என்று சொல்கிறீர்களா? அதுவும் சரிதான். நீங்கள் சரியென்று நினைத்துச் செய்வது பிழையாய்ப் போய்விடுகின்றதே! நல்லதைச் செய்தாலும் மற்றவருக்கு அது கெட்டதாகத் தெரிகின்றதே என்று பார்த்தால் இங்குதான் நமது கர்மா செயல்படுகிறது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

கமல்ஹாசன் ஒரு திரைப்படத்தில், “உப்பு விற்கப் போனேன் - மழை பெய்தது! மாவு விற்கப் போனேன் - காற்றடித்தது! என்று பாடுவார். நம்மையும் மீறி இப்படி நடந்தால் இது என் கர்மாவால் எனக்கு நேரிட்டது என்று புரிந்துகொண்டு அதை நாம் பொறுமையுடன் ஏற்றுக்கொள்ள வேண்டும். நான் முற்பிறவியில் விட்ட பிழை இப்பொழுது இப்படி என்னைத் திருப்பித்தாக்குகிறது அல்லது அறியாமையால் சரியாகச் சிந்தித்துச் செயல்படாததால் ஏற்பட்ட நிலை என்று நினைத்து, எல்லாம் அவன் செயல் என்று வருவதை பிரசாதமாக ஏற்க வேண்டும். அதற்காகத் துன்பப்படுவதையும் புலம்புவதையும் பழிவாங்கப் புறப்படுவதையும் விட்டுவிட்டு அமைதியாக வருவதைத் தாங்கிக் கொண்டு அதைச் சீர் செய்ய என்ன வழி என்று சிந்தித்து மேலும் நல்ல விதமாக நடந்துகொள்ளப் பழக வேண்டும்.

இப்படிச் செய்தால் ஏற்கனவே இருக்கின்ற கர்மா அழிவதோடு மேலும் கர்மாவைக் கூட்டாத ஒரு நிலை ஏற்படும். இருந்த கர்மா கழிய மேலும் கர்மா அதிகமாகாமல் இருக்க அப்பொழுதுதான் நம்மால் பரிணாம வளர்ச்சியில் சில படிகள் முன்னோக்கிச் செல்ல முடியும்.

எனவே வாழ்க்கையில் வருகின்ற இன்ப துன்பங்களை, வெற்றி தோல்விகளை, இலாப நஷ்டங்களை (இப்படி சொல்லிக் கொண்டே போகலாம்) இதுவும் கடந்து போகும் என்ற மனப்பக்குவத்துடன்

# அகமாற்றம்-தேவை#

#
ஏற்றுச் சரியான விதத்தில் இவற்றிற்கு முகம் கொடுக்க முயல்கின்ற அகமாற்றம் நம் ஒவ்வொருவருக்கும் கட்டாயம் தேவை.